தேதி.02.03.2020



சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S.No.241/2018 பி.வா.சா1.மகேந்திரன் (எ) திரு.நஞ்சப்பன்

பி.வா.சா.1 நீதிமன்ற அனுமதியின் படி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.5(அசலுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது).

குறுக்கு விசாரணை

நான் 10-ம் வகுப்பு படித்துள்ளேன். என் மனைவி பெயர் இந்திரா. என் மனைவியும் 10-ம் வகுப்பு படித்துள்ளார். முதல்விசாரணை சங்கதிகளை நான் படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேன். தாவா சொத்து ஆதியில் என் அப்பாவுக்கு சொந்தமானது, என் அப்பா இறந்தபிறகு என் சகோதரிகள் எனக்கு விடுதலைபத்திரம் எழுதிகொடுத்துவிட்டார்கள். அதன் அடிப்படையில் தான் நான் பழனிச்சாமிக்கு கிரயம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கிரயஉடன்படிக்கை தான் செய்தேன் கிரயம் செய்து கொடுக்கவில்லை. பொதுவாக கிரயஉடன்படிக்கை செய்யும் போது மூல பத்திரங்களை கொடுக்கமாட்டார் என்பதால் கேட்டார்கள் கொடுத்தேன். கிரயஉடன்படிக்கை அடிப்படையில் தான் கிரயம் எழுதினார்கள் என்றால் கிரயமே எனக்கு தெரியாது. கிரயம் நான் எழுதிக்கொடுக்கவில்லை. கிரய ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. கிரய ஒப்பந்தம் கடனுக்காக தான் எழுதப்பட்டது. வாதிக்கு நான் வாங்கிய கடனை திரும்ப கொடுத்தேனா என்றால் வட்டி 3 வருடம் கட்டினேன். வட்டி கட்டியதற்கு நான் இரசீது எதுவும் வாங்கவில்லை. கிரய ஒப்பந்த தேதியிலிருந்து ஒவ்வொரு 9 மாதம் முடியும் போதும் நான் வட்டி கட்டி திரும்ப திரும்ப கிரயஒப்பந்தம் எழுதுவோம். அந்த கிரய ஒப்பந்த நகலை என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் எனக்கு சரியாக

தெரியவில்லை. 2015-ம் ஆண்டில் கடைசியாக கிரயஒப்பந்தம் எழுதப்பட்டது. கிரய ஒப்பந்தத்தில் 9 மாதம் காலகெடு எழுதப்பட்டது. 2015-ம் ஆண்டில் கடைசியாக எழுதப்பட்ட கிரயஒப்பந்தத்தில் எவ்வளவு கிரய தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் ரூ.8,00,000/-. வாதி தாக்கல்செய்துள்ள கிரய பத்திரம் ரூ.8 லட்சத்திற்கு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிரய ஆவணம் எழுதிக்கொடுக்கும் போது கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்தோம். ரூ.7,50,000/- கிரயம்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தொகை வாங்கிக்கொண்டு வாதிக்கு கிரயம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் என் மனைவி இந்திரா சாட்சி கையொப்பம் செய்துள்ளார். நான் வீட்டுவரி செலுத்த செல்லும் போது தான் கிரயம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியவந்தது. 2015-ம் ஆண்டு இறுதியில் வரி கட்ட போகும் போது தான் தெரியவந்தது. தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டு அதில் என் மனைவியும், நானும், கையொப்பம் செய்துள்ளோம் என்றாலும், தற்போது கிரயஉடன்படிக்கை என்று சாட்சியத்தை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் அன்றே சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். இந்த கிரயத்தை ஆட்சேபனை செய்து வழக்கோ, சார்பதிவாளர் அலுவலகத்தில் மனுவோ நான் கொடுக்கவில்லை. என் சகோதரிகள் எழுதிக்கொடுத்த பாகவிடுதலை பத்திரத்தின் அசலையும், வாதியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் ஆமாம். என் அப்பா கிரயம் வாங்கிய வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்களை நான் தான் வாதி பழனிச்சாமியிடம் கொடுத்தேன். கிரய பத்திரம் எழுதும்போது பட்டா மாறுதல் நமூனா அந்த கிரய ஆவணத்துடன் எழுதிக்கொடுக்கப்படும் என்றால் ஆமாம். நான் வாதிக்கு தாவா சொத்தை கிரயம் எழுதிக்கொடுத்தேன் என்றாலும், கிரய உடன்படிக்கை அல்ல என்றால் சரியல்ல. வாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பிறகு அவர் வெளியூரிலிருப்பதே சாதகமாக கொண்டு பூட்டை உடைத்து சொத்தில் சுவாதீனத்திற்கு நான் சென்றுவிட்டேன் என்றால்

சரியல்ல. அக்கிரமமாக தாவா சொத்தில் நுழைந்து விட்டு வாதியின் மீது பொய்யான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையிலும், எதிர்வழக்குரையிலும் நான் வாதியிடம் ரூ.5 லட்சம் பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேன். இதுவரை நான் அசல் தொகை கட்டவில்லை. வட்டி மட்டும் தான் கட்டிவருகிறேன். நான் எதிர்வழக்குரை தாக்கல்செய்த போது வாதியிடம் வாங்கியதாக கூறும் ரூ.5 லட்சத்தை திரும்ப செலுத்த தயாராக இருப்பதாக சொல்லவில்லை. அக்கிரமமாக தாவா சொத்தில் நுழைந்து விட்டு அந்த வகையில் வீட்டின் மின் கட்டணத்தை நான் செலுத்திவருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை என்னுடைய அவசர குடும்ப தேவைக்காக விற்பனை செய்து கிரயதொகை ரூ.7,50,000/- நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. கிரய தேதியிலியே தாவா சொத்து சுவாதீனத்தை வாதியிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. கிரயம் கொடுத்து, சுவாதீனத்தை கொடுதது அக்கிரமமாக உள்ள நுழைந்து தற்பொழுது பொய்யாக எதிர்வாதம் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் மற்றும் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்றாலும், தாவா படி தீர்வாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

ஒ/ம். மகேந்திரன் (எ) திரு.நஞ்சப்பன் DW1

ஒ/ம். P. ஈஸ்வரமூர்த்தி
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்